THE NEW INDIAN EXPRESS

17 JULY 2021

PAGE 3

EXPRESS READ

## Pondicherry University to conduct examinations online

Puducherry: Pondicherry University on Friday announced that it would be conducting all the theory examinations online which were scheduled from July 19. According to a release, this will not be applicable to Under-Graduate and Post-Graduate Medical and Dental courses. The practicals can be conducted online, only when simulation is possible otherwise practical exams are to be conducted offline. ENS

DINA THANTHI

17 JULY 2021

PAGE 6

# பல்கலைக்கழகத்தில் தடுப்பூசி முகாம்

புதுச்சேரி, ஜூலை.17-

புதுவை பலக்லைக்கழக மருத்துவமனை வளாகத்தில் கொரோனா தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில், இதுவரை தடுப்பூசி போடாத பேராசியர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், மாணவர்கள் என 750-க்கும் மேற்பட்டவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டனர். சிலர் 2-வது தவணை தடுப்பூசியையும் போட்டுக்கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழக நிர்வாகம் செய்திருந்தது.

DINA THANTHI

17 JULY 2021

PAGE 6

### நாளை மறுநாள் தொடங்குகிறது

# கல்லூரி தேர்வுகள் ஆன்லைன் மூலம் நடத்தப்படும்

## பல்கலைக்கழகம் அறிவிப்பு

புதுச்சேரி, ஜூலை.17-
கல்லூரி தேர்வுகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் நடைபெறும். தேர்வுகள் நாளை மறுநாள் தொடங்குவதாக புதுவை பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

### மாணவர்கள் கோரிக்கை

புதுவையில் கொரோனா தொற்று முழுமையாக கட்டுக்குள் வராததால் கல்லூரி தேர்வுகளை ஆன்லைன் மூலமே நடத்தவேண்டும் என்று மாணவர்கள் அமைப்புகள் கோரிக்கை விடுத்து வந்தன.

இதுதொடர்பாக கல்வித்துறை பொறுப்பினை வகிக்கும் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பல்கலைக்கழக துணைவேந்தரிடம் ஆலோசனை நடத்தினார்.

மேலும் நேற்று முன்தினம் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜனை சந்தித்து பேசிய அமைச்சர் நமச்சிவாயம், கல்லூரி தேர்வுகளை ஆன்லைன் மூலம் நடத்த துணைவேந்தரிடம் பேசியிருப்பதாகவும், இதுதொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

### பல்கலைக்கழகம் அறிக்கை

இந்தநிலையில் பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் லாசர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுவை பல்கலைக்கழகத்தின் தேர்வுகள் அனைத்தும் நாளை மறுநாள் (திங்கட்கிழமை) தொடங்குகிறது. இந்த அட்டவணையானது மருத்துவம், பல் மருத்துவ கல்லூரிகளுக்கு பொருந்தாது.

தேர்வுகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் நடைபெறும். செய்முறை தேர்வுகள் வாய்ப்பு இருந்தால் ஆன்லைன் மூலம் நடைபெறும். இல்லாவிட்டால் ஆப்லைனில் (நேரடியாக) நடைபெறும்.

தேர்வு எழுதும் மாணவர்களுக்கு விடைத்தாள்கள் இ-மெயில் மூலமாக அனுப்பப்படும். மாணவர்கள் தேர்வுகளை வெள்ளைத்தாளில் கருப்பு மையினால் எழுத வேண்டும். தேர்வு எழுத 3 மணிநேரம் வழங்கப்படும்.

தேர்வு எழுதியபின் விடைத்தாள்களை ஸ்கேன் செய்து தேர்வு முடிந்து 30 நிமிடத்துக்குள் கல்லூரிகளுக்கு மாணவர்கள் அனுப்ப வேண்டும். கல்லூரி முதல்வர்கள் அதை பிரிண்ட் அவுட் எடுத்து கல்லூரி முத்திரையுடன் அதேநாளில் பல்கலைக்கழகத்துக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAMALAR

17 JULY 2021

PAGE 4

# இணைப்பு கல்லூரிகளுக்கான செமஸ்டர் தேர்வு 19ம் தேதி துவக்கம்

**புதுச்சேரி, ஜூலை 17–**

பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளுக்கான ஆன்–லைன் செமஸ்டர் தேர்வு வரும் 19ம் தேதி துவங்குகிறது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக புதுச்சேரி பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளில் ஒத்தி வைக்கப்பட்ட 2020–21 கல்வியாண்டிற்கான நவம்பர், டிசம்பர் செமஸ்டர் தேர்வு வரும் 19 ம்தேதி முதல் துவங்கப்படும் என புதுச்சேரி பல்லைக்கழகம் அறிவித்துள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக தேர்வாணையர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளுக்கான செமஸ்டர் தேர்வுகள் வரும் 19ம் தேதி அட்டவணைப்படி துவங்கும்.

இளநிலை, முதுநிலை மருத்துவம், பல் மருத்துவ படிப்புகளை தவிர்த்து மற்ற படிப்புகளுக்கு-ஆன்–லைன் தேர்வு நடக்கிறது. வினாத்தாள்கள் இ–மெயில் மூலம் மாணவர்களுக்கு அனுப்பப்படும்.

அதன் பிறகு இணைப்பு கல்லூரி மாணவர்கள் ஏ–4 தாளில் கருப்பு மையில் விடைகளை எழுத வைக்க வேண்டும். 3 மணி நேர தேர்வு முடிந்த பிறகு 30 நிமிடங்களுக்குள் விடைத்தாள்களை ஸ்கேன் செய்து, கல்லூரி முதல்வருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அதன் பிறகு அந்தந்த கல்லூரி முதல்வர்கள் மாணவர்களின் விடைத்தாள்களை பதிவிறக்கம் செய்து, அதன் முகப்பு பக்கத்தில் கல்லூரி சீல் பதிந்து, அன்றைய தினமே பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

17 JULY 2021

PAGE 1

# ஆன்லைனில் கல்லூரி தேர்வு புதுவை பல்கலை அறிவிப்பு

**புதுச்சேரி, ஜூலை 17:** புதுவை பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி லாசர், அனைத்துக் கல்லூரி முதல்வர்களுக்கும் அனுப்பியுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

வரும் 19ம் தேதி முதல் திட்டமிடப்படி அனைத்து எழுத்து தேர்வுகளும் ஆன்லைன் முறை மூலம் நடத்தப்படும். இருப்பினும் இளநிலை, முதுநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்புகள் மற்றும் திட்டமிடப்படாத தேர்வுகளுக்கு இந்த அறிவிப்பு பொருந்தாது.

சாத்தியம் இருப்பின் செய்முறை தேர்வுகளை நேரடியாக (ஆப்லைன்) நடத்தலாம்.

கல்லூரி முதல்வர்கள் வினாத்தாள்களை மின்னஞ்சல் (இமெயில்) மூலம் அனுப்புவார்கள்.

மாணவர்கள் ஏ4 அளவு வெள்ளை காகிதத்தில் கருப்பு மை கொண்டு தேர்வினை எழுத வேண்டும். 3 மணி நேர காலத்திற்குப் பிறகு மாணவர்கள். தாங்கள் எழுதிய விடைத்தாளை ஸ்கேன் செய்து கல்லூரி முதல்வருக்கு 30 நிமிடங்களுக்குள் அனுப்ப வேண்டும்.

கல்லூரி முதல்வர்கள், விடைத்தாள்களை ஸ்கேன் செய்து, முதல்பக்கத்தில் கல்லூரி முத்திரையை இட்டு, அதே நாளில் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

THE HINDU (TAMIL)

17 JULY 2021

PAGE 3

# ஜூலை 19-ல் ஆன்லைனில் கல்லூரி தேர்வுகள் தொடக்கம்

- புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் அறிவிப்பு

**புதுச்சேரி**

கல்லூரி தேர்வுகள் ஆன்லைனில் தான் நடத்தப்படும். திட்டமிட்டபடி வரும் 19-ம் தேதி தொடங்கும் என்று மத்திய பல்கலைக்கழகம் உறுதி செய்துள்ளது.

புதுச்சேரியில் கல்லூரி தேர்வுகள் தொடர்பாக தெளிவான நடைமுறை வெளியிடப்படாமல் இருந்தது.

இதைத்தொடர்ந்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். ஆன்லைனில் தேர்வு நடத்துமாறு பல்கலைக் கழகத்துக்கு கல்வியமைச்சர் நமச்சிவாயம் கடிதம் எழுதியுள்ளதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் லாசர், அனைத்துக் கல்லூரிகளுக்கும் அனுப்பியுள்ள உத்தரவு:

வரும் திங்கள் முதல் (ஜூலை 19) திட்டமிடப்படி அனைத்து தியரி தேர்வுகளும் ஆன்லைன் முறை மூலம் நடத்தப்படும். இருப்பினும் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்புகள் மற்றும் திட்டமிடப்படாத தேர்வுகளுக்கு இந்த அறிவிப்பு பொருந்தாது. நடைமுறைத் தேர்வுகளுக்கு வாய்ப்பு இருந்தால் நேரடியாக நடத்தலாம். கல்லூரி முதல்வர்கள் வினாத்தாள்களை மின்னஞ்சல் மூலம் அனுப்புவார்கள்.

மாணவர்கள் ஏ4 அளவு வெள்ளை காகிதத்தில் கருப்பு மை கொண்டு எழுதலாம். 3 மணி நேர காலத்திற்குப் பிறகு மாணவர்கள் அவர்கள் எழுதிய விடைத்தாளை ஸ்கேன் செய்து கல்லூரி முதல்வருக்கு 30 நிமிடங்களுக்குள் அனுப்பலாம். கல்லூரி முதல்வர்கள் விடைத்தாள்களை நகலெடுத்து முதல் பக்கத்தில் கல்லூரி முத்திரையை இட்டு அதே நாளில் பல்கலைக்கழகத்துக்கு விடைத்தாளை அனுப்பி வைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.